Education கல்வி அධ්‍යාපන

PROGRESS TOGETHER •

# www.kalvi.lk

கல்வி வளங்கள் அனைத்தும் நமது
இணையத்தளத்தில்...

## தரம் 10

பரீட்சை வினாத்தாள்கள்

பாடப்புத்தகங்கள்

பயிற்சி கையேடுகள்

பாடக்குறிப்புகள்

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் : 10

**தமிழ் மொழியும் இலக்கியமும்** / දෙමළ භාෂාව - II | நேரம்: 2 மணித்தியாலம்

---

* **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.**

1. சுருக்கமான விடை எழுதுக.
   1) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   ''இரையெடுத்துச் சென்று குனிந்தலகால்''
   2) ''விட்டிர்ராதே! விட்டிர்ராதே! பிடி என்று கத்தினேன்'' என்ற பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.
   3) பணி என்ற சொல்லைக் கொண்டு பெயராகவும், வினையாகவும் தனித் தனியாக இரண்டு வாக்கியங்கள் அமைக்குக.
   4) தன்னைத் தான் பார்த்து வெடித்துச் சிரிக்கிறது என் பித்து மனம். இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைத் தருக.
   5) ''இருதலைக் கொள்ளி'' என்ற மரபுத்தொடரின் கருத்து யாது?
   6) ''நான் மனிதன் அறிவின் பசியில் அலைபவன்'' இங்கு அறிவின் பசி என்பதன் கருத்து யாது?
   7) சிறுமி என்னை இவ் அடக்குமுறையிலிருந்து காப்பாற்றுபவர்கள் யாருமில்லையா என அழுதாள் பொருத்தமான நிறுத்தற்குறியினையிட்டு மீண்டும் இவ்வாக்கியத்தை எழுதுக.
   8) குற்றியலுகரத்தில் வரும் மெய்யெழுத்துத் தொகுதி எது?
   9) தரப்பட்ட நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்தி மீள எழுதுக.
   நன்றியுரை, தலைமையுரை, தமிழ்மொழி வாழ்த்து, மங்கள விளக்கேற்றல், சிறப்பு விருந்தினர் உரை
   10) அறிக்கையில் தகவல் திரட்டும் வழிமுறைகள் இரண்டு தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறுத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.
   1) இன்று எமது நாட்டில் வருடா வருடம் வெள்ளப் பெருக்கினால் பாரிய அழிவு ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். வெள்ளப் பெருக்குகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் நகர்ப்புறங்களில் நீர்வடிகாலமைப்பு ஒழுங்கின்மையே ஆகும். எனவே சரியான வித்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**
   2) தொற்றா நோய்கள் இன்று சமூகத்தில் தலைவிரித்தாடுகின்றன. நீர்ழிவு இதய நோய், புற்று நோய் சிறுநீரகம் தொடர்பான நோய்கள் என்பன பரவலாகக் காணப்படுகின்றன இவற்றுக்குப் பரம்பரை அலகுகளே பிரதான காரணி என்று இனங்காணப்பட்டாலும் மனிதர்களின் வாழ்க்கை முறையிலும் பழக்க வழக்கங்களிலும் ஏற்பட்ட மாற்றமே இந்நோய்களுக்கான அடிப்படைக் காரணமென உணரப்பட்டுள்ளது என்பதை விளக்கி நீர் நிகழ்த்தும் ஒரு **மேடைப்பேச்சு**
   3) இன்று அதிகரித்து வரும் வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் பாதசாரிகள் எனக் கூறும் ஒருவருக்கும் இல்லை வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் சாரதிகளே என்று கூறும் ஒருவருக்குமிடையே ஓர் உரையாடல்.

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது



kalvi.lk

4) ஆலங்குடிக் கிராமத்தைச் சேர்ந்த அபிராமிக்கு அண்மையில் நடந்து முடிந்த தேசியமட்ட விளையாட்டுவிழாவில் பங்குபற்றச் சந்தர்ப்பம் கிட்டியது. அங்க இடம்பெற்ற 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டு சாதனை படைத்து அவள் தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டாள். அவளது சாதனையை பாராட்டிக் கொளரவிப்பதற்காக முழுக்கிராமமே ஒன்றுதிரண்டது. நடைபெறவுள்ள அந்நிகழ்வை எண்ணிய அபிராமியினமனதில் சாதனைபுரிய முன் சந்தித்த சவால்களும் தட்டிக் கொடுப்புகளும் காட்சிகளாக விரிந்தன. அத்துடன் எதிர்காலத்தில் சாதிக்க வேண்டியவை பற்றிய எண்ணங்களும் மனக்கண்ணில் தோன்றின. அபிராமியின் சாதனைகள், சவால்கள் எதிர்காலக் கனவுகள் என்பவற்றைப் பிரதிபலிப்பதாக அமைந்த ஒரு **சிறுகதை**

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40 - 50 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

மனித வாழ்க்கையின் நோக்கம் எது என்பதை மக்கள் அறிந்து கொள்வதற்கு இலக்கியங்கள் உதவுகின்றன. பழந்தமிழர் சமூகம் பற்றிய கருத்துக்களை தாம் உருவாக்கிய இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். ஆணும் பெண்ணும் இணைந்து வாழத் தொடங்கிய போது குடும்பம் என்ற அமைப்பு உருவாகியது. குடும்ப அமைப்பிலே சில ஒழுங்குமுறைகள் திட்டமிடப்பட வேண்டியிருந்தன. ஒழுக்க நிலையிலே ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடற்ற விதிமுறைகளைப் பழந்தமிழர் பேணினர்.

பெண்ணே இல்லத்தில் தலைவியாக இருந்தாள். பெண் இல்லத்தைப் பேணுபவளாக அமைய ஆண் வெளிவாழ்க்கையைப் பேணுபவனாக அமைந்தான். ஆணும் பெண்ணுமாக இணைந்து ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கிய போது மனை முக்கியம் பெறத் தொடங்கியது. மனை வாழ்க்கையில் வம்சாவிருத்தி முக்கிய அம்சமாகியது. குடும்பத்தில் கணவன். மனைவி குழந்தைகள், உறவினர்கள் நண்பர்கள் என உறவு நிலைகள் அமைந்துள்ளன. அவரவர்க்கென கடமைகளும் பொறுப்புக்களும் வகுக்கப்பட்டன. தனி மனித வாழ்வுக்குக் கற்பிக்கப்பட்ட நெறிகள் சமூகத்தில் பண்பாடாக நிலை பெற்றன. மனிதன் பண்பான நெறிமுறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் உயர்வான வாழ்வு வாழ முடிந்தது. மனிதன் கடைபிடித்த நெறிகள் மரபுகளாகப் பேணப்பட்டன.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.

தமிழ்மொழியில் வந்து கலந்துள்ள வேற்று மொழிச் சொற்களும் ஆரிய மொழியில் இருந்து வந்து கலந்தவையே எண்ணிக்கையில் அதிகமாகும் தமிழ் மொழியில் பன்னிரண்டு உயிரும் பதினெட்டுமெய்யுமாக முப்பது முதலெழுத்துக்கள் உள்ளன. ஆரிய மொழியிலோ பதினாறு உயிரும் முப்பத்தேழுமெய்யுமாக ஐம்பது மூன்று எழுத்துக்கள் உள்ளன. இவ்வெழுத்துக்களில் உயிரெழுத்துக்களில் பத்துமெய்யெழுத்துக்களுட் பதினைந்துமாக இருபத்தைந்து எழுத்துக்கள் ஆரியத்துக்கும் தமழுக்கும் பொதுவானவை. உயிரெழுத்துக்களுள் ஆறும் மெய்யெழுத்துக்களுள் இருபத்திரண்டுமாக இருபத் தெட்டு எழுத்துக்கள் ஆரியத்துக்குச் சிறப்பானவை. ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்தாலாக விகாரமின்றி தமிழில் வழங்கும் வடச்சொல் தற்சமமம் எனப்படும். ஆரியத்துக்கேயுரிய சிறப்பெழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய இருவகை எழுத்தாலுமாகி விகாரம் பெற்று தமழில் வழங்கும் வடசொல் தற்பவம் எனப்படும். ஆரிய மொழிச் சொற்கள் தமிழ் நடை பெற்றுவரும் போது வடசொல் எனப்படும்.

1) தமிழில் கலந்துள்ள சொற்கள் கூடுதலானவை எம்மொழியில் இருந்து வந்து கலந்துள்ளன?
2) வடசொல் என்றால் என்ன?
3) தமிழிலுள்ள முதலெழுத்துக்கள் எத்தனை?
4) ஆரியத்தில் மொத்தமாக எத்தனை எழுத்துகள் உள்ளன?
5) தற்பவம் என்றால் என்ன?

(10 புள்ளிகள்)



kalvi.lk

5. ஐக்கிய நாடுகள் தாபனம் ஒக்ரோபர் பதினைந்தாம் திகதியை உலக கைகழுவுதல் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. சவர்க்காரத்தைப் பயன்படுத்திக் கைகழுவும் பழக்கத்தை உலகளாவிய ரீதியில் ஊக்குவிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும் இப்பழக்கம் தமது ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதது எனும் கருத்தை வலியுறுத்தி 100 சொற்களில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுக.

அல்லது

உமது பிரதேசத்தில வேலை செய்து கொண்டிருந்த இரவுப் போக்குவரத்து பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். எனவே இச்சேவையை மீண்டும் பெற்றுத் தருமாறு உமது பிரதேச போக்குவரத்து சபைத் தலைவருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

For More Exam Papers ..!

Follow Our Whatsapp Channel

Click And Join

Education
கல்வி
අධ්‍යාපන